# கிறிஸ்துவே நம் பூரணமா?

Michael Clark and George Davis

> நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேணடிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களலெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், என்னில் நீர் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவான் 17:18-23).

சபை கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்க முடியாமல் தோற்றுப்போய்விட்டது; இது இந்த நாட்களில் சபைக்கு விரோதமான வருந்தத்தக்க ஒரு குற்றச்சாட்டாகும். கிறிஸ்தவத்தின் பல்வேறு குழுக்களிடையேயுள்ள இந்த ஒற்றுமையின்மையின் காரணமாகவும், அவைகளுக்கிடையே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிற பொருளற்ற வீண் சண்டையின் காரணமாகவும், இயேசுவும் அவருடைய போதனைகளும் கேலிக்குரியவை என்று உலகத்தில் பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். "நீர் ஏன் கிறிஸ்தவனாக மாறவில்லை?" என்று ஒரு கிறிஸ்தவ மிஷனரியார் ஒருமுறை மகாத்மா காந்தியிடம் கேட்டாராம். அவருடைய பதில் உண்மையாகவே ஒரு வெளிப்பாட்டைப்போல் இருக்கிறது. "கிறிஸ்தவர்களாகிய உங்களை நான் பார்க்காதிருந்திருந்தால், நான் கிறிஸ்துவை விசுவாசித்திருப்பேன்," என்று சொன்னாராம்.

தேவனை விசுவாசிப்பவர்களுக்குத் *தங்களுடைய* உபதேசங்கள்தான் மிகவும் இன்றியமையாதவை, அவசியமானவை என்பதை நிரூபிப்பதற்காகக் கிறிஸ்தவ ஸ்தாபனங்களும், மதவாதக் குழுக்களும் ஒருவரோடொருவர் சண்டைபோட்டிருக்கிறார்கள், ஒருவரையொருவர் கொலைசெய்திருக்கிறார்கள். வயது வந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமா அல்லது குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா? தெளிப்பு ஞானஸ்நானமா அல்லது முழுக்கு ஞானஸ்நானமா? பீட அழைப்பினால் வரும் இரட்சிப்பா அல்லது புனித மதச் சடங்குகளால் வரும் இரட்சிப்பா? ஆசாரியத்துவ அதிகாரமா அல்லது பாஸ்டருடைய அதிகாரமா? வேதாகமம் மட்டும்தான் அதிகாரமா அல்லது போப்பானவரின் தவறாவரமா? இப்படிப் பல உபதேசங்கள். இந்த நம்பிக்கைகளையெல்லாம் நாம் "நன்னெறிகள்" என்றழைக்கலாம். நீங்கள் இவைகளுக்குக் கீழ்ப்படியும்போது, நீஙகள் "நன்னெறியுள்ளவர்கள்" என்று கருதப்படுகிறீர்கள். நீங்கள் இவைகளுக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், நீங்கள் "நன்னெறியற்றவர்கள்" என்று குற்றஞ்சாட்டப்படுகிறீர்கள். இன்று உலகத்தில் 2,00,000க்கும் அதிகமான ஸ்தாபனங்களும், மதவாதக் குழுக்களும் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தோடு அல்லது மதவாதக் குழுவோடு ஐக்கியம்கொள்ள வேண்டுமானால், அவர்களுடைய உபதேசங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும், படிநிலை அமைப்புமுறைக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று அவைகள் கண்டிப்பாகக் கோருகின்றன. அவர்களுடைய குழுவுக்கு வெளியே இருக்கும் எல்லா மக்களும் "தொலைந்துபோனவர்கள் என்றும், நரகத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்( என்றும் அவர்களில் அநேகர் நினைக்கிறார்கள். ஒருவர் இந்த நிலையை அலசிப்பார்த்து, "அப்படியானால் எல்லாரும் நரகத்துக்குத்தான் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், நீங்கள் நீதிமான் என்று ஒரு குழு சொல்லக்கூடும். ஆனால், நீங்கள் ஒரு பாவி என்று மற்ற 1,99,000 குழுக்களும் தீர்க்கக்கூடும். பெருவாரியானவர்களின் உடன்பாட்டில் நாம் நம்பிக்கை வைத்தால், நாமெல்லாருமே தவறுதான் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்," என்று கூறினார்.

எனவே, யோசிக்கிற மனிதன், குருட்டுத்தனமாகக் கூட்டத்தைப் பின்பற்றிச்செல்லாத ஒருவன், இந்த நிலைமையை அலசிப்பார்த்து, சரியான உபதேசமும், நம்பிக்கை அமைப்புமுறையும் உண்மையாகவே ஒரு பூரணமா என்று ஆச்சரியப்படுகிறான். இதுதான் உண்மை என்றால், முரண்பாடான 2,00,000 பூரணங்கள் இருக்காதா? அங்கு ஏகோபித்த கருத்து இல்லாததால், அவை பூரணமாக இருக்க முடியாதே? நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி பூரணம் என்பது ஒற்றுமையை அல்லது ஒருமையைக் குறிக்கிறது.

மனிதர்களின் மதங்கள் தங்கள் பக்தர்களின் வாழ்க்கையின்மேல் தலைமை அதிகாரத்தையும், கட்டுப் பாட்டையும் கொண்டிருக்கிற விரும்புகின்றன, கோருகின்றன. இருப்பினும், அதே நேரத்தில், ஒரே வொரு தேவன் மட்டுமே இருக்கிறார் என்று அவை அறிக்கை செய்கின்றன. இந்த இரண்டும் எப்படி உண்மையாக இருக்க முடியும்? முற்றிலும் பின்பற்றுவதறகு ஒரேவொருவர் மட்டுமே தகுதியுடையவர். இது தேவனுக்கு மட்டுமே சொந்தம்; இது மக்கள்கூட்டத்தின் அபிப்பிராயத்துக்கோ அல்லது படிநிலை அமைப்பின் மேல்மட்டத்தின் கோரிக்கைகளுக்கோ உட்பட்டதல்ல.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் என்றும், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்றும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். எல்லாவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டிகரின் பார்வையில் ஆபிரகா முக்கு இப்பேர்ப்பட்ட தயவு கிடைப்பதற்குக் காரணமாக இருந்த அவருடைய விசுவாச செயல் என்ன? ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மகனை மோரியா மலைக்குக் கொண்டுசென்று, ஈசாக்கைத் தனக்குத் தந்தவருக்கு அவனைப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கும் அவன் ஆயத்தமாயிருந்தான். கர்த்தர் கொடுக்கிறார் என்றும், கர்த்தர் எடுத்துக்கொள்கிறார் என்றும் அவனுக்கு தெரிந்திருந்தது. அவர் நமக்கு எதையாவது தந்தபிறகு, நம் சித்தத்துக்கு உட்பட்டுத்தான் எதையாவது எடுத்துக்கொள்ள முடியுமென்றால், அவர் கர்த்தராக இருக்க முயைாது. நாம் வெறுமனே மதரீதியான அஞ்ஞானிகளாகவே இருப்போம். ஆபிரகாம் அறிந்திருந்த இப்படித் "தன்னிச்சையாகச்" செயல்படுகிற ஒரு தேவனிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு சட்டதிட்டங்களாலான ஒரு பட்டியலை நம்மைச் சுற்றி வேலியாக வைத்துக்கொண்டால், உண்மையாகவே நாம் அவரைப் பின்பற்றுபவர்கள்தானா?

"தேவன் அன்பாக இருந்தால், சிறு குழந்தைகள் ஏன் சாகிறார்கள்? உலகத்தில் ஏன் இவ்வளவு தீமை யும், பாடுகளும் இருக்கின்றன? தேவன் இப்படிச் செய்ய மாட்டார்...அல்லது தேவன் அப்படிச் செய் வார்..." என்று மக்கள் அடிக்கடி சொல்ல நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். மதவாத வெறியர்களும், நாத்திகர்களும் இறையாண்மையுள் நம் தேவன் இருக்க வேண்டிய இடத்தில் தங்களை வைத்துக் கொண்டு, தங்கள் சக மனிதர்களின் ஏகோபித்த ஆமோதிப்பைப் பெற முடியும் என்ற நம்பிக்கையில், வரம்புக்குட்பட்ட தங்கள் மனங்களின் எண்ணங்களால் தேவனை மட்டுப்படுத்த முடியும் என்று நினைக்கிறார்கள்; ஏதோவொரு காரியத்தை முரட்டுத்தனமாக நம்பினால், அதன்பின் தாங்கள் நம்பு கிற காரியத்தை ஒப்புக்கொள்வதற்குப் போதுமான மக்களை சம்பாதித்துவிட்டால், தேவனைப்பற்றிய தங்கள் எண்ணங்கள் எப்படியாவது உண்மையாகிவிடும் என்றும், தங்கள் *சொந்த* கற்பனைக்கேற்ப ஒரு தேவனை உருவாக்கிவிடலாம் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், நம்முடைய பூரணம் என்ன? இது ஒரு குழுவின் ஏகோபித்த ஆமோதிப்பு இல்லை என்றால், வேறு என்ன? நாம் நம் மதத்தின் சட்ட திட்டங்களைக் கடைப்பிடிக்கிறோமா? அல்லது பூரணமாகிய ஒருவரைப் பற்றிக்கொண்டிருக்கிறோமா? மனிதர்களின் உபதேசங்களைவிட அல்லது வெறும் நன் னெறிகளைவிட உயர்ந்தவை என்று அவர் கருதக்கூடிய ஒன்றை அந்தப் பூரணம் நம்மிடம் கோரக் கூடும் (அவர் நிச்சயமாக நம்மிடம் கோருகிறார்). அந்த ஒரு காரியம் என்னவாக இருக்க முடியும்? அந்த *ஒரு காரியம்* இன்னும் குறைவுபடுகிற மக்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்களோ, அத்தனை உருவங்களில் அது தோன்றுகிறது (லூக். 18:18-23). இது நம் ஜீவனை வெறுத்து, ஆவியானவரில் கீழ்ப்படிதலுடன் நடத்தல் என்றழைக்கப்படுகிறது.

"நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்ததுக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; **ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்**" (யோவான் 3:7-8), என்று இயேசு நிக்கோதேமுடன் சொன்னபோது, மதத்தின்மேல் அவர் ஓர் அம்பை எய்தார்.

நம் வாழ்க்கையைக்குறித்த "தேவனுடைய சித்தம்" என்று நாம் நினைக்கிற சட்டதிட்டங்களாலான ஒரு தொகுப்பை நம்மில் பெரும்பாலோர் வைத்திருக்கிறோம். அவை நம் *பாரம்பரியங்களாக* மாறிவிடுகின் றன. 2000 வருடங்களுக்கு முந்தைய எபிரேயர்கள் என்ன செய்தார்களோ, அதுதான் இன்றைக்கும் நடக்கிறது. ஆயிரம் வருடங்களுக்குமுன் தேவன் ஒரு மனிதனிடம் ஒன்றைச் சொன்னார். மற்ற மனி தர்கள் அதற்கு வியாக்கியானம் அளிக்கவும், அதனுடன் ஏதோவொன்றைக் கூட்டவும், அதை விதி முறைப்படுத்தவும் ஆரம்பித்தார்கள். தொடக்கத்தில் அந்த மனிதனுக்கும், அவருடைய பூரணருக்கு மிடையே நடந்த நெருக்கமான உரையாடலுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு இதைச் செய்தார்கள். உண்மையைச் சொல்வதானால், இந்த உரையாடலின் கலப்படமான, உருக்குலைந்த பதிவேடுதான் இப்போது எல்லா மனிதர்களிடமும் இருக்கிறது; எனவே, தனிப்பட்ட விதத்தில் அவர்கள் தேவனை விசுவாசிக்க வேண்டியதில்லை அல்லது அவருடைய

தனிப்பட்ட சத்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்றும் சொல்லும் அளவுக்கு அது இடத்தைப் பிடித்துவிட்டது. அவர்களிடம் ஒருவகையான மாற்று விசுவாசம் இருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால், விசுவாசிகளின் கூட்டத்தில் ஒருவர் என்றழைக்கப்படுகிறவரிடம் விசுவாசம் இருக்க வேண்டும் என்று இப்போது யாரும் கோருவதில்லை. மாறாக, ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கத்துக்கு அனுசரணையாக நடக்கிறாரா என்றுதான் பார்க்கிறார்கள்.

கூட்டத்தோடு சேர்ந்து அவர்களுடைய நெளிவுசுளிவுகளுக்கு வளைந்துகொடுத்துப் போவதுதான் வாழ்வதற்கு மிகப் பாதுகாப்பான வழிபோல் தோன்றுகிறது. நீங்கள் அவர்களை உத்தமமாகப் பின்பற்றினால், அங்கு இருக்கும் தலைவர்கள் உங்களைத் தட்டிக்கொடுப்பார்கள்; அங்கு இருக்கும் "விசுவாசிகள்" உங்களைப் பாராட்டுவார்கள். அவர்கள் பற்றிக்கொண்டிருக்கும் தலைவரைவிட பூரணமானவருக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால் அது உங்களுக்கு ஆபத்தாகிவிடும். இயேசு, பவுல், ஸ்தேவான், மேலும் இலட்சக்கணக்கான விசுவாசிகள் இதைக் கண்டுகொண்டார்கள். இயேசு தம் பிதாவின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தார்; மக்கள் கூட்டத்தின் சட்டதிட்டங்களும், பாரம்பரியங்களும் பிதாவின் சித்தத்துக்கு முரணாக இருந்தபோது (பெரும்பாலும் முரண்பட்டன), அவர் அவைகளை அசட்டைசெய்தார். ஓய்வுநாளில் அவர் குணமாக்கினார்; அது தேவதூஷணம் என்று அவர்கள் கூச்சலிட்டார்கள். கை கழுவாமல் அவர் சாப்பிட்டார்; எனவே, அவர் அசுத்தமாகிவிட்டார் என்று அவர்கள் கத்தினார்கள். பாவிகளோடும், வேசிகளோடும், வரி வசூலிப்பவர்களோடும் சேர்ந்து அவர் சாப்பிட்டார்; "இவர் மதுபானப் பிரியர்...போஜனப்பிரியர்...பாவிகளின் சிநேகிதன்," என்று அவர்கள் இழிவாகப் பேசினார்கள். அவரைக் குற்றப்படுத்தியது யார்? பிதாவானவரா? இல்லை. இந்தக் காரியங்களையெல்லாம் செய்தபோது இயேசு பிதாவானவருக்குக் கீழ்ப்படிந்துகொண்டிருந்தார். அவருடைய சீடர்கள் அவரைக் குற்றப்படுத்தினார்களா? அவருடைய நடவடிக்கைகளைப் பார்த்து, அவர்கள் பல வேளைகளில் குழப்பமடைந்தார்கள். எனவே, அவரைக் குற்றப்படுத்தக்கூடிய கட்டம் அவர்கள் வாழ்க்கையில் வந்தது. அன்றைய மதத் தலைவர்களைப்பற்றிப் பேசும்போது, "ஆண்டவரே, நீர் சொன்னதைக் கேட்டு அவர்கள் இடறலடைந்தார்கள் என்று உமக்குத் தெரியாதா?" என்று கேட்டார்கள்.

இயேசு மதத் தலைவர்கள் ஏற்றுக்கொண்ட பூரணத்துக்கு விரோதமாக, மனிதர்களால் சரி என்றும், நல்லது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏகோபித்த கருத்துக்கு விரோதமாகச் செயல்பட்டார். அவர் அப்படிச் செய்யாதிருந்திருந்தால், தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போயிருப்பார்; ஏனெனில் தேவன் ஒருவரே நல்லவர். மேலும், தேவனுடைய கறையற்ற ஆட்டுக்குட்டியாக மனிதர்களின் பாவங்களுக்காகப் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய தம் வேலையில் அவர் தோற்றுப்போயிருப்பார். மற்ற பூரணத்துக்கு, யூதமதத்தின் உலகளாவிய ஏகோபித்த கருத்துக்கு, அவர் முழுமையாகக் கீழ்ப்படிந்திருந்தால், அவர்கள் அவரைக் கனம்பண்ணியிருப்பார்கள்; ஆனால், கடைசியில், அவர் எல்லாவற்றையும் இழந்திருப்பார்.

விசுவாசத்தால் வாழ்கிற ஒரு மனிதனாக இருப்பது ஆபத்தான காரியம். மனிதர்களுடைய ஸ்தாபனங்களின் தலைமைத்துவத்துக்கு நீங்கள் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவர் என்று அவர்கள் நினைப்பார்கள். ஏனென்றால், இதற்குமேல், அவர்களால் உங்களைக் கட்டுப்படுத்தமுடியாது. அந்த மக்கள் கூட்டத்தார் உங்களைச் சந்தேகத்தோடு பார்ப்பார்கள்; ஏனென்றால், நீங்கள் *அவர்களுடைய* தலைவருக்குக் கீழ்ப்படிவதில்லை. நீங்கள் ஆவியானவரைப் பின்பற்றினால், நீங்கள் அடுத்ததாக என்ன செய்வீர்கள் என்று யாருக்குத் தெரியும்? இதைவிட மோசம் என்னவென்றால், உங்களிடம் இருப்பதாக அவர்கள் கருதுகிற "முரட்டாட்டமான" வழிகளினால் நீங்கள் "விசுவாசிகளின்" கூட்டத்தில் வேறு யாரையாவது தொற்றுநோயைப்போல் தாக்கக்கூடுமோ என்று அவர்கள் பயப்படுவார்கள்.

கும்பலின் ஏகோபித்த கருத்தா அல்லது பூரணரா என்பதுதான் காரியம் என்பதை மறந்துவிட வேண்டாம். இயேசு ஒரு பிளவுபட்ட கும்பலால் கொலைசெய்யப்பட்டார்; இந்தக் கும்பல் அதற்குமுன் ஒருபோதும் ஒன்றாக இருந்ததேயில்லை. அபிஷேகம் பண்ணப்பட்டவரைக் காட்டிக்கொடுக்க வேண்டும், கொலைசெய்ய வேண்டும், என்பதுதான் அவர்களுடைய ஒற்றுமைக்கான காரணம். "கடைசியாக நம் திருச்சபையைப்பற்றிய காரியத்தில் நாமெல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து வருவது எவ்வளவு அற்புதம்!" என்று நிச்சயமாக அவர்களில் சிலர் சொல்லியிருப்பார்கள். இன்னும் சிலர், "நாம் ஆவியில் ஒன்றாக இருக்கிறோம், நாம் கர்த்தரில் ஒன்றாக இருக்கிறோம்," என்று பாடியிருப்பார்கள். வைதீகம் இயேசுவைக் கொலைசெய்தது என்பதுதான் உண்மை.

பார்பரா பிரவுண் பின்வருமாறு எழுதினார்:

> நாத்திகத்தாலும், அராஜகத்தாலும் இயேசு கொல்லப்படவில்லை. மதத்துடன் கூட்டுச்சேர்ந்த சட்டம் ஒழுங்கினால்தான் இயேசு கொல்லப்பட்டார். இது எப்போதும் ஒரு சாவுக் கலவை.

> தேவனுடைய மனம் தங்களுக்குத் தெரியும் என்று கோரி, மற்றவர்களைத் தங்களுடைய எண்ணத்துக்கு ஒத்திருக்கச் செய்ய, தேவைப்பட்டால் பலாத்காரம் செய்வதற்குக்கூட ஆயத்த மாயிருக்கக்கூடிய மனிதர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். தேவனுடைய சித்தம் எது என்றும், தங்களுடைய சித்தம் எது என்றும் பிரித்துப்பார்க்கத் தெரியாதவர்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். கோவில் போலீஸ்காரர்கள் எப்போதும் ஒரு மோசமான அடை யாளம். கோவில் குருக்கள் (ஆசாரியர்கள்) துப்பாக்கியைத் தொங்கவிட்டுக்கொண்டு, நாட் டாண்மைக்காரர் வேலையைச் செய்யும்போது, கவனமாயிருங்கள். யாரோ ஒருவன் சீசரைத் தவிர வேறு இராஜா இல்லை என்கிறான் (பார்பரா பிரவுண் டெய்லர் எழுதிய *ஒரு சாவுக் கலவை* என்ற புத்தகத்திலிருந்து)

“கும்பல் என்றாலே தவறு” என்று சோரென் கீர்க்கெகார்ட் கூறினார். “கூச்சல்போடுகிற 10,000 மனி தர்களின் உதவியுடன் சத்தியம் வெற்றிபெறுகிறது என்று வைத்துக்கொள்வோம்; வெற்றிபெற்றது உண்மையாக இருந்தாலுங்கூட, அவர்கள் வெற்றிபெற்ற முறையைப் பார்க்கும்போது, அவர்கள் பெற்ற சத்தியத்தைவிட ஒரு பெரிய அசத்தியம் மனதில் ஆழமாகப் பதிந்துவிடுகிறது,” என்று அவர் மேலும் எச்சரித்தார். கும்பலிடமிருந்து எதிர்பார்க்கிற நம்பிக்கையும், பாதுகாப்பும் பொய்யான நம் பிக்கை, பொய்யான பாதுகாப்பு. வழிகாட்டுதலையும், அங்கீகாரத்தையும் இயேசு கூட்டத்திடமிருந்து ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. உண்மையயைச் சொல்வதானால், அவரை உயர்வாகக் கருதிய கூட்டங்களை அவர் தவிர்த்தார்; ஏனெனில், அவர்களுடைய இருதயங்களில் *உண்மையாகவே* என்ன இருந்தது என்று அவர் அறிந்திருந்தார் (யோவான் 2:24-25).

கீர்க்கெகார்ட் மேலும் பின்வருமாறு கூறினார்:

> “கூட்டத்தின் அங்கீகாரத்தை இச்சித்து, அவர்களிடம் பேசுபவர்களை, அதற்காகக் கூட்டத்தின் முன் குனிந்து, அவர்களைச் சுரண்டுபவர்களை வேசிகளைவிடக் கீழானவர்களாகக் கருத வேண்டும்.”

எல்லா மனிதர்களும் கட்டுப்பாட்டை இழந்துவிட வேண்டும் என்று நாம் கூறுகிறோமா? நிச்சயமாக இல்லை. கும்பல்தான் அப்படி கட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது. இது முழுக்க முழுக்க இன்பமே பிரதானம் என்னும் கொள்கையாகும். அப்படியானால், நாம் என்ன சொல்ல வருகிறோம்? தேவ னுடைய குறிக்கோளின்படி அவரால் அனுப்பப்பட்ட இயேசு, ஆபிரகாம், பவுல், ஸ்தேவான் ஆகி யோரின் விசுவாசத்தைப்போல், தூய்மையான விசுவாசத்தில் நீங்கள் நடக்க விரும்பினால், ஆட்சிபுரி கின்ற படிநிலை அமைப்புமுறையின் கட்டுப்பாட்டையும், கூட்டத்தின் ஏகோபித்த கருத்தின் கட்டுப் பாட்டையும்விட உயர்ந்த ஒரு கட்டுப்பாட்டின்கீழ் நீங்கள் வருகிறீர்கள் என்று நாங்கள் சொல்லு கிறோம். கூட்டத்துக்கு விரோதமாகச் சென்றால், என்ன விலைக்கிரயம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று முதலாவது அலசிப்பார்த்து, தேவனுடைய சத்தத்தைப் பின்பற்றாமல் பின்வாங்கிப் போகமாட் டீர்கள். ரொட்டித் துண்டின் எந்தப் பக்கத்தில் வெண்ணெய் தடவியிருக்கிறது என்பதைப்பற்றி இனி கவலைப்படமாட்டீர்கள். மனிதர்களின் பாரம்பரியங்களுக்குக் கீழ்ப்படிந்து, பாதுகாப்பான வழியைப் பற்றிக்கொள்கிற, வெறும் மதவாத மனிதனாக இருப்பதற்குப்பதிலாக, உண்மையான விசுவாசத்தின் நபராக மாறுவீர்கள்.

***Provocations*** என்ற புத்தகத்தில் கீர்க்கெகார்ட் பின்வருமாறு கூறினார்:

> “முரண்பட்டதுபோல் இருந்தாலும் விசுவாசத்தைப் பொறுத்தவரை ஓர் உண்மையான கூற்று உண்டு; அது என்னவென்றால், ஒரு தனிநபர் ஒரு கூட்டத்தைவிட உயர்ந்தவன்; பூரணரோடு (தேவனோடு) தனக்கிருக்கும் உறவின்மூலம்தான், கூட்டத்தோடு தனக்கிருக்கும் உறவை தனிநபர் தீர்மானிக்கிறான். கூட்டத்தோடு தனக்கிருக்கும் உறவின்மூலம், பூரணரோடு தனக் கிருக்கும் உறவை அவன் தீர்மானிப்பதில்லை. அதாவது, விசுவாசத்தால் வாழ்வதென்றால், ஒருவன் தேவனுக்கு, தேவனுக்கு மட்டுமே, முழுக்க முழுக்கக் கடமைப்பட்டவன் என்று பொருள். கடமை என்ற பந்தத்தில், தனிநபர் என்ற முறையில், கட்டளை கொடுக்கிற தேவ னோடு மட்டுமே அவன் தன்னை உறவுபடுத்துகிறான். இந்தக் கடமை மட்டுமே பூரணமானது. இந்தக் காரணத்திற்காக, விசுவாசியைப் பொறுத்தவரை, நன்னெறிகள் பின்னுக்குத் தள்ளப் படுகின்றன. இது விசுவாசத்தைப் பொறுத்தவரை முரண்பாடாய்த் தோன்றும் ஓர் உண்மை. என்று நடுக்கதோடும், பயத்தோடும் கூறுகிறேன். அதாவது நன்னெறிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகின்றன.

> எப்படிப் பார்த்தாலும் சரி, ஆபிரகாமின் கதையைப் பார்க்கும்போது, நன்னெறிகள் தற்காலிக மாக நிறுத்திவைக்கப்பயடுவதைப் பார்க்கிறோம். தனிமனிதன் என்ற முறையில், கூட்டத்தை விட அவன் உயர்ந்தவனாகிவிடுகிறான். இது விசுவாசத்தைப்பற்றிய ஒரு முரண்பாடாய்த் தோன்றும் ஓர் உண்மை. இதை விளக்க முடியாது.

எனவே, நாம் விசுவாசத்தால் நடக்கும்போது எல்லாவற்றையும் இழந்துவிடுகிறோமா? எல்லாம் இழப்பு தானா? எந்த ஆதாயமுமில்லையா? அப்படி இல்லை. மாறாக, எது நமக்கு ஆதாயம் என்று நாம் கணக்கிடுகிறோமோ அதின் தன்மை மாறிவிடுகிறது. நாம் அழைக்கப்பட்டிருக்கும் இந்த அற்புதமான பாதையைப்பற்றி பவுல் பேசினார். ஏனென்றால், உண்மையான பூரணரைப் பின்பற்றும்போது கொடுக்க வேண்டிய விலைக்கிரயத்தை மட்டும் அல்ல, விசுவாசத்தால் நடப்பதின் மகிமையையும், அவர் அறிந்திருந்தார்.

> ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்ட மென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயம்பண்ணிக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக் குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற் கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித் தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லா வற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன். (பிலி. 3:7-11)

பின்னாட்களில், எருசலேமில் சபையின் யூதத் தலைவர்களைச் சந்தித்ததைப்பற்றி பவுல் பேசுகிறார். அவர்களைப்பற்றி அவருக்கு நல்ல எண்ணம் ஏற்படவில்லை. “அப்படியிருந்தும் ஏதோவொன்றாகக் காணப்பட்டவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை. அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்லவே. மாநாட்டில் ஏதோ வொன்றாகத் தங்களைக் காண்பித்தவர்களால் எனக்கு எந்த இலாபமும் ஏற்படவில்லை” (கலாத்தியர் 2:6).

மனிதர்களின் கூடாரங்களிலும், அவர்களுடைய மதரீதியான அமைப்புகளிலும் சேவிப்பதென்றால், தன் வாழ்க்கையில் தேவனுக்குரிய இடத்தை அவருக்குக் கொடுக்க மறுப்பதும், விசுவாசத்தை மறுதலிப்பதுமாகும் என்று பவுல் அறிந்திருந்தார். எனவே, எபிரேயர் நிருபத்தை எழுதியர் இவ்வாறு கூறுகிறார்:

> பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜனபாதார்த்தங் களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது; போஜனபதார்த்தங்களில் முயற்சிசெய்கிறவர்கள் பலனடையவில்லையே. நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவை களைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை. ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக் குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே, இயசேுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடு பட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிற தையே நாடித் தேடுகிறோம் (எபி. 13:9-14).

ஏகோபித்த கருத்துக்கு விரோதமாகச் செல்வதற்கு ஒரு பெரிய விலைக்கிரயம் செலுத்த வேண்டும். “ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், அவர்களில் பிகெல்லு எர்மொகெனே முதலாய் என்னைவிட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய்,” என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார். இறுதியாக, தன் ஊழியத்துக்கு உத்தமமாக இருந்த எல்லாரையும் பவுல் இழந்தார்.

> நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை; எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுவதற்காகவும்,

புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும் என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயி னின்றும் நான் இரட்சிக்கப்பட்டேன். கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்ஜியத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். (2 தீமோ. 4:16-18)

இதுதான் சிலுவைப் பாதை. வேலைக்காரன் எஜமானைவிட உயர்ந்தவன் அல்ல.

இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:32-33)

நாம் அவருக்கு உத்தமமானவர்கள் என்று எண்ணப்படவேண்டுமானால், நாம் ஒரு காரியத்தைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்று தேவன் கோருகிறார். நாம் தேவனில் விசுவாசத்தால் நடக்கையில், இந்தத் தெரிந்தெடுத்தலை நாம் ஒவ்வொருநாளும் செய்ய வேண்டியிருக்கிறது. ஏகோபித்த கருத் துக்கும், சத்தியத்துக்கும் இடையே இருந்த வித்தியாசத்தை நன்றாகப் புரிந்துகொண்ட கீர்க்கெகார் டையே நாங்கள் மீண்டும் மேற்கோள் காட்டுகிறோம். "...எந்த அளவுக்குக் கூட்டம் அதிகமாக இருக் கிறதோ, அந்த அளவுக்கு அது பாராட்டுகிற காரியம் அறிவீனமாக இருக்கக்கூடிய வாய்ப்பு அதிகம்; அந்த அளவுக்கு அது சத்தியமாக இருக்கக்கூடிய வாய்ப்பு குறைவு. அது நித்தியமான சத்தியமாக இருக்கக்கூடிய வாய்ப்பு இல்லவே இல்லை" (*இருதயத்தின் தூய்மை* என்ற புத்தகத்திலிருந்து)